மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ்.வி.சண்முகம் நாளை காலையில் நீங்கள் தொடர்ந்து பேசலாம். நாளை பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. இன்னும் 2, 3 கட்சித் தலைவர்களும் பேச வேண்டி இருக்கிறது எதிர்க்கட்சித் தலைவரும் பேச வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) பிறகு நிதியமைச்சருடைய பதிலுரை இருக்கிறது கேள்வி நேரத்தைத் தளர்த்துவது குறித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2-10

5. அரசினர் தீர்மானம்

(பேரவை விதி 32-ஐத் தளர்த்தல்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான்தீர்மானத்தை முன் மொழிகிறேன். சட்ட மன்ற ஒரு மணி நேரம் சட்டமன்ற பேரவையின் முதல்வினவிாக்கள் டைகள்பேரவை.விதி 32-ஐ 19-3-1993 அன்று தளர்த்தி ந்த நேரத்தைஅரசினர் அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்'

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ஆம் என்க (ஆம்)
மறுப்போர் இல்லை என்க
மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒரு மனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன.
(19-3-1993)

பேரவை மீண்டும் நாளைக் காலை 10 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.11 மணிக்கு, ஒத்தி வைக்கப் பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

114. 15—5—1991-ஆம் நாளிட்ட உள் துறையின் அறிவிக்கை எண். II (2)/HO/2507/91-ல் திருத்தமொன்று செய்வது குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின்